(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வீரைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆண்டு 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: " ரூ. 9-40
சொவிவாய்ப்பகுதி: " ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
" அரைக்கலம் ரூ. 5-00
" கால்கலம் ரூ. 3-15
" ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றி கவனிக்கப்படா.

புத்தகம்—நசு. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஸு புரட்டாதிமீ ௧0உ; (1924 செப்டெம்பர் 25) வியாழக்கிழமை } இலக்கம்—உச.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகனுருள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தியதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## தேக்க மரம்.

நங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொயபனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானுற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானுறு.
ஈாபி. வல்லுவெட்டித்துறை. (H. 29.)

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
## Kairul Muslimeen Medical Hall
## PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி [illegible]

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்த வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய துமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக் குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது லேகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன.
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

அநேக நற்சாட்சிகளும் தங்கமேடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தாவாத முள்ளது. குணம இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து [illegible] மருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜால்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கரந்தி, கரைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 திராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
(Y. 31.) சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வி. ஸாமி அய்யங்காருடைய

## அரைக்கீரை விரைத் தைலம்.



இதன் குணம்.

பித்த மேகநீரான சிரசுக்கேறி அதனுல் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, சரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத சுழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறுது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பாக்கிங் போஸ்டேச் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வி. பீ. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வி: எஸ். கோமளத்தம்மாள்,
மாணியுபாக்கார்,
(Y 26.) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

## பிரகடனம்.

ஸீனியர் வகுப்புக்குரியவை. 1924.

நைமிட்சிச்சருக்கம்: வில்லிபுத்தூரர் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அணு 12.)

திருக்குறள் முதற்பத்ததிகாரம்: இப்பத்ததிகாரங்களும் தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றோடு விலை சதம் 50. (அணு 8.)

பெண்கல்வி: மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்க வேண்டியது விலை சதம் 85 (அணு 14.)

ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

நாலடியார் முதற் 15அதிகாரம்: இப்பதினைந்ததிகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கிலமொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

சிசுபாலசரித்திரம்: விலை சதம் 50 (அணு 8)

மற்றும் நூல்கள்.

மயானகாண்டம்: ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள இக்காண்டம் பொழிப்புரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்புமுதலியவற்றுடன் 2ம்பதிப்பு. தமிழ் 7ம் 8ம் வகுப்புகளிற கல்விபயிலும் மாணக்கருக்குச் செய்யட்பாடமாகஉபயோகிக்கப்படுவது. விலை சதம்50.

கதிரையாத்திரைவிளக்கம்: கதிர்காமயாத்திரை அனுபவத்தையும் கதிர்காமவேலவர் திருவருட் பெருமையையும் கொண்டிச்சித்து நடையிற் கூறுவது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் பாடிய கதிர்காமவேலவர்கீர்த்தனம், பரமானந்தப்புலவர் பாடிய நல்லைக் கந்தா கீர்த்தனம், அகவலென்னுமிவைகளுடன். விலைசதம்25.

சிவராத்திரிவிரதமான்மியம்: சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது. தோத்திரப்பாக்களுடன் விலை சதம் 10. (அணு 2.)

அதிகமாக வாங்குவோருக்குத் தகுந்தகழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
(Q 50) Vannarponnai.

### பிரசாரகர் தேவை.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு ஒரு சைவப் பிரசாரகர் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் வேண்டிய விபரங்களுடன் வருகிற அக்டோபர்மீ கடு-ந் திகதியிலன்று அல்லது அதற்கு முன் மேற்படி சபைக் காரியதரிசிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

V. K. ஞானசுந்தரம்,
மேற்படி சபைக் காரியதரிசி.

வண்ணார்பண்ணை,
19—9—21.


# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி
புரட்டாதிமீ 10உ வியாழக்கிழமை.


## ஸ்ரீமாந். அ. சபாபதியவர்களின் ஞாபகசின்னக் கூட்டம்

சிறந்த சனத்தலைவரும் பத்திரிகாசிரியருமாக விளங்கிய ஸ்ரீமாந் அ. சபாபதியவர்களின் ஞாபகார்த்தமாகச் சென்ற சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள றிஜ்வே மண்டபத்தில் ஒரு பெருஞ் சபை கூடியது. அச்சமையத்தில் ஸேர். பொ. இராமநாதனவர்களே சபைத்தலைவராக விருந்தனர். சைவர் கிறிஸ்தவர் என்னும் பேதமின்றிப் பன்னூற்றுக்கணக்கான அபிமானிகள் அச்சமையத்திற் சமுகமாயிருந்தனர். சபைத் தலைவர் ஸ்ரீமாந். சபாபதியவர்கள் இந்நாட்டின் ஈடேற்றத்தின் பொருட்டுச் செய்த நன்மைகளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இனிது கூறினர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் இல்லாமையையிட்டுப் பெரிதும் பரிவுற்றனர். அதன்பின் ஸேர். அம்பலவாணர் கனகசபையவர்கள் பின் வரும் நிர்ணயத்தை எடுத்துக் கூறினர்:-

"இலங்கைச் சட்டநிருபணசபை அங்கத்தவராக விருந்தவரும், ஆங்கில இந்துசாதனக் கௌரவ பத்திராசிரியராக விருந்தவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைவராக விருந்தவருமாகிய ஸ்ரீமாந் சபாபதியவர்களின் தேகவியோகத்தைக் குறித்து யாழ்ப்பாணத்துள்ள பல வகுப்பினரின் பிரதிநிதிகளையுங் கொண்டுள்ள இக்கூட்டத்தார் இலங்கை வாசிகள்பொருட்டும் விசேஷமாகத் தமிழ்மக்களின் பொருட்டும் அனுதாபமுற்று அங்ஙனம் அனுதாபமுறுவதோடு, ஸ்ரீமாந். சபாபதியவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு தகுந்த சின்னத்தை விரைவில் அமைக்கவேண்டுமென் நிர்ணயிக்கின்றனர்."

இலங்காபிமானிப் பத்திரிகாசிரியர் ஸ்ரீ கனகரத்தினமவர்கள் இந்நிர்ணயத்தை அனுவதித்தபோது ஸ்ரீமாந். சபாபதியவர்களின் தேசசேவையைப்பற்றி நன்கு பேசினர். நியாயதுரந்தரர் மிஸ்டர் துரைசுவாமி தம்பு, ஆசிரியர் மிஸ்டர் J. K. சண்முகம், தேசாபிமானிப் பத்திராதிபர் T. P. மாசிலாமணி ஆகிய இவர்கள் மேற்படி நிர்ணயத்தை அனுசரித்துப் பேசியபோது ஸ்ரீமாந் சபாபதியவர்களின் குணாதிசயங்களைப் பெரிதும் மெச்சிப் பேசினர். அதன்பின் குறித்த நிர்ணயம் சபையோரின் அங்கீகாரம்பெற்று நிறைவேறியது.

அதன்பின்னர் ஸேர் அம்பலவாணர் கனகசபையவர்களைத் தலைமையாகக்கொண்ட ஒரு நிர்வாகசபை, ஞாபக சின்னத்தையமைத்தற்குப் பொருள் சேர்க்கும்படியும் அந்த ஞாபக சின்னத்திற்காகவேண்டிய கருமங்களையிட்டு யோசிக்கும்படியும் நிர்வகிக்கப்பட்டது அச்சபைக்கு ஸ்ரீ T. R. நல்லையா அவர்களும் ஸ்ரீ V. K. ஞானசுந்தரமவர்களும் காரியதரிசிகளாகவும் ஸ்ரீ ச சரவணமுத்து அவர்கள் தனாதிகாரியாகவும் நியமிக்கப்பட்டனர். ஈற்றில் ஸேர் அம்பலவாணர் கனகசபையவர்கள் அக்கிராசனருக்கு வந்தனங் கூறியபின் கூட்டம் பூரணமாயது.

"நல்லார்குணங்களுரைப்பதுவும் நன்றே" என்ற பிரகாரம் ஸ்ரீமாந் சபாபதியவர்கள் போன்ற பெரியாரின் குணங்களை யெடுத்துப் பன்முறை சொல்வதனால் வரும் மிகை யாதுமில்லையாம். ஸ்ரீமாந் சபாபதியவர்களின் விடாமுயற்சியும் பொறுமையும் விஷயங்களை உள்ளபடி உணருமாற்றலும் அகந்தையின்மையும் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது தங்கருமமே கண்ணாயிருக்கு மியல்பும் ஏழைகளிடத்துள்ள அனுதாபமும் பேசுவது கொஞ்சம் செய்வது அதிகமாகவிருக்கும் பழக்கமும் ஞாபகசக்தியும் தர்க்கஞானமும் பின்வருங் காரியத்தை முந்தியே உணர்ந்து அதற்குத் தாக் கருமஞ்செய்யுமாற்றலும் தன்னயங் கருதாமையும் பிறரைத் தம்வயப்படுத்துமியல்பும் சினமின்மையும் இன்ன பிறவும் சனத்தலைவர்களாக வரவிரும்புவோர் எவர்களாலும் பின்பற்றத்தக்கனவாம். இவரிடத்தில் விளங்கிய ஒழுக்கமே இவர் பகைவரும் இவரைக் காலகதியில் மெச்சச் செய்தது. இவருடைய ஒழுக்கம் முஷ்களங்கமானதாகும். சுருட்டுப்பிடித்தல் முதலிய தீயபழக்கங்களைத்தானும் இவர் விலக்கியுள்ளவர். புண்ணைத் தேடித்திரியும் ஈ போல ஸ்ரீமாந் அ. சபாபதியவர்களிடத்தில் தாம் கொண்ட அழுக்காறுகாரணமாகப் பகைமை பாராட்டித் திரிந்தவர்கள் அவருடைய சீவியகாலத்தில் யாதும் ஒழுக்கக் குறைவைக் கண்டுபிடித்துத் தூற்றலாமென முயன்று வாய்க்காது ஏமாந்துதிரிந்தனர்.

இப்படிப்பட்ட சகல சுகுணங்களும் வாய்ந்த ஒரு சனத்தலைவரைத் தமிழகத்தாராகிய நாங்களும் எங்கள் பிற்சந்ததியாரும் ஞாபகத்தில் வைத்திருத்தல் ஆவசியகமாம் இவரைப் பின்பற்றி நடத்தல் ஆவசியகமாம் இவருடைய ஞாபகார்த்தமாக முதற் செய்பத்தக்கது ஆங்கிலத்திலும் தமிழிலும் இவர் சீவிய சரித்திரத்தை எழுதி வெளியிடுதலேயாம். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியோடு மாத்திரமன்றி இந்து சாதனத்தோடு தொடர்புடையவர்களும் ஞாபகத்தில் வைக்கும்படி சைவப்பிரகாச யந்திரசாலையில் ஒரு ஞாபக சின்னம் சமர்ப்பித்துவைத்தல் விசேஷமாகும். ஞாபகசின்ன நிர்வாகசபையார் இவ் விஷயங்களைப்பற்றி நன்கு யோசித்தல்வேண்டும். மேலும் தமிழ்மக்களாயுள்ளார் ஒவ்வொருவரும் ஸ்ரீமாந் சபாபதியவர்களின் ஞாபகசின்னம் இனிது நிறைவேறும் வண்ணம் தங்கள் தங்களால் இயன்ற திரவிய சகாயஞ் செய்தல்வேண்டும். ஸ்ரீமாந் சபாபதி அவர்கள்போன்ற பெரியாரே செத்துஞ் சாகாதவரெனப்படுவோர்.

## உலகம் பலவிதம்.

"இனியென்ன முடிவாச்சுதே, என்னிய எண்ணமும் வீணாச்சுதே" என்று புலம்பிக்கொண்டு சாராயநாதன் சொல்லிளம்பியப்பனுடைய [illegible] கைபிடித்துக்கொண்டு [illegible] பெருமூச்சும் கொட்டாவியும் விட்டுக்கொண்டு தளர்ந்த நடையினனாய் மெல்ல மெல்ல நடந்து புலோலிப் பசுபதீசுரன் கோயில் மேலைவீதியிலுள்ள ஒரு கடையின் கதவிற் புடைத்தான். காலம் இராக்காலம்; நேரம் ஒன்பதுமணிவரையி லிருக்கும். கதவிற் புடைத்தலும் "அதாரது" என்று உள்ளேயிருந்து ஒரு உரத்த சத்தம் புறப்பட்டது "அது நாங்கள்தான், கதவைத் திறவுங்கள்" என்று சொல்லிளம்பியப்பன் மெல்லச் சொன்னான். "நாங்களென்று யார்? இந்த அகாலமான நேரத்தில் என்ன அலுவல்" என்று பின்னருஞ் சத்தம் கடையுளிருந்து புறப்பட்டது. "என்ன அப்பா, கோபிக்கிறாய், நாங்கள்தான் சொல்லிளம்பியப்பனும் சாராயநாதனும், என்ன செய்வது நீயும் இன்றைக்குக் கோபிக்கிறாய், பொல்லாதகாலத்திற்கு அரைஞாணும் பாம்பாய்க் கடிக்குமாம்" என்று சொல்லிளம்பி விளம்புவதற்கிடையில் ஜின்தம்பி கதவைத் திறந்தான். இருவரையுங் கண்ட ஜின்தம்பி பதைபதைத்து வாயிற் கை வைத்து "சித்தப்பா வாருங்கள், அண்ணே வாருங்கள், எனக்கு இன்றைக்கு உங்கள் குரலைக் கொஞ்சமும் மட்டுப்பிடிக்கமுடியவில்லை" என்று உபசார வார்த்தை சொல்லி உள்ளே அழைத்துச் சென்றான்.

* * *

இவர்கள் உள்ளே புகுந்தசமையத்தில், கடையுள் ஒரு கண்ணாடித் தீபம் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. அங்கே ஏதோ பிரமாதமான ஒரு காரியத்தையிட்டுக் கலந்து யோசித்துக்கொண்டிருந்த பிரண்டித்துரை, உவிஸ்கிமுத்து, ஷாம்பேன்ராசா, பீர்சிங்கம், உவைன்பிள்ளை என்னுமிவர்கள் நால்வரும் அவ்விருவரையுங் கண்டமாத்திரத்தே எழுந்து நின்று உபசாரவார்த்தை கூறி ஆசனமுதவி இருக்கச்செய்து தாமும் இருந்தனர். ஜின்தம்பி கபாடத்தை யடைத்துவிட்டு மீண்டுவந்து மேசையோடு சாய்ந்துகொண்டு நின்றான். அப்பொழுது பிரண்டித்துரை அங்குவந்த இருவரையும் பார்த்து "போசனம் முடித்துக்கொண்டு நாங்கள் உங்களிடம் வரத்தானிருந்தோம், அதற்கிடையில், கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி, நீங்களே வந்து விட்டீர்கள்" என்றார். "வந்தென்ன, விட்டென்ன, எல்லாஞ் சரிதான்; உங்களுக்கு முந்தியே சொன்னேன் இந்த யாழ்ப்பாணத்தாரை நம்ப வேண்டாமென்று, இவர்களை உங்களிலும் பார்க்க நான் நல்லாய் கெடுக அறிவேன்; இந்த ஊரிற் பிறந்து இந்த ஊரில் வளர்ந்து இந்த ஊரில் வாழ்ந்துவரும் எனக்கல்லவோ இவர்களுடைய சுப குணந் தெரியும், பிற ஊரிலிருந்து வந்த உங்களுக்கு இவர்களைப்பற்றி யென்ன தெரியும்; [illegible] எங்களுடன் என்று சொல்லுவார்கள் எங்கள் சத்துருக்களைக் கண்டால் அவர்களுடன் என்று சொல்லுவார்கள். குரங்கெல்லாம் ஒருமுகமென்றபடி சமையத்தில் அவர்களெல்லாரும் ஒருங்கு சேர்ந்துவிடுவார்கள், இப்பொழுது நடந்ததைப் பார்த்தீர்களா; என்னசெய்யலாம் கிழவன் சொல்லுக் கின்னாசுகாரனுக்கு ஏறாது" என்று சொல்லிளம்பியப்பன் கூறினான்.

* * *

"எனக்குத் தெரியுமோ, அண்ணே, ஆர் கைவிட்டாலும் இந்த வடமராட்சியார் எங்களைக் கைவிடமாட்டார்களென்றல்லவா எண்ணியிருந்தேன்; அவர்களும் இப்படிச் சதிசெய்வார்களென்பதை உன்னாலே யண்ணே, இன்றைக்குத்தான் உணர்ந்தேன்" என்று பிரண்டித்துரை சொல்லுதலும், உவிஸ்கிமுத்து அவரைத் தடுத்துச் சொல்லிளம்பியப்பனைப் பார்த்து "அண்ணே, நான் முந்தியே சொல்லிவிட்டேன்; யாழ்ப்பாணப்பட்டினத்தில் உள்ளவர்கள் எங்களோடு மாறுபட்டு எங்களைத் துரத்தியபோதே நாங்கள் இந்த ஊர்விட்டுப் பரதேசம்போயிருக்கவேண்டியது; யாழ்ப்பாணத்தில் நான் இருக்குங் காலத்திலே உத்தியோகத்தர் எத்தனை பேர், நியாயவாதிகள் எத்தனைபேர், துரைமார் எத்தனைபேர், சுருட்டுத் தொழில் செய்வோர் எத்தனைபேர், பிரபுக்களென்றிருப்பவர்கள் எத்தனைபேர் என்னுடன் நண்புபூண்டு என்னைப் பெரிதுங் கொண்டாடிவந்தனர்; சிலர் என்னைத் தங்கள் வீட்டிற்கும் அழைத்துச் சென்று உபசரித்தனர். ஒருநாளிரவு அவர்களிற் சிலர் என்னிடம் வந்தபோது "இது மெய்தானா, எங்களைக் குடியெழுப்புகிறதற்கு உங்களிற் சிலர் யோசிக்கின்றார்களாமே. அப்படியானால் நீங்களும் அவர்களுடன் சேர்ந்திடுவீர்களோ" என்று நான் கேட்க அவர்கள் சத்தியஞ் செய்து ஐயோ, உன்னை விட்டால் எங்களுக்கு ஊணேது உறக்கமேது உசாரேது, உங்களில் ஆரை விட்டாலும் உவிஸ்கிமுத்து உன்னை உன்னை ஒருபோதும் விடமாட்டோம்; உவர்கள் உங்களைக் குடியெழுப்புவதென்று சொல்வதுதான்; ஒருபோதுஞ் செய்யப்போவதில்லையென்றார்கள். அவர்கள் செய்த சாலவித்தை அத்தனையும் மெய்யென்று நானிருந்தேன். பின்பு எங்களைக் குடியெழுப்பும் நாள் சமீபித்துவிட, முதனாளிரவு என்னுடன் இனிக்கப் பேசிக் கொண்டாடிச் சென்றவருட் சிலர் விடியப் பார்த்தால் எங்களை ஊரிலிருந்து ஓட்டவேண்டுமென்று கூட்டங் கூட்டி உபந்நியாசஞ் செய்யக் கண்டேன், எங்களுக்கு மாறாகத் துண்டுப் பத்திரம் அடித்துவிடக் கண்டேன், பத்திரிகையில் எழுதி வெளியிடக் கண்டேன், சனஞ் சேர்த்துத் திரியக் கண்டேன், கடைசியில் எல்லாரும் வந்து சம்மதஞ் சொல்லவுங் [illegible]டேன்; அதற்குப்பிறகுதான் இந்தயாழ்ப்பாணத்தவரிடத்தில் எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லாமற்போய்விட்டது" என்று சொன்னான். இதற்கிடையில் மேசையோடு சார்ந்துகொண்டு நின்ற ஜின்தம்பி "ஏன் கோறணமேந்து எங்களுக்குச் செய்ததும் நீதியீனந்தானே; ஆண்களைச் சம்மதங் கேட்டதுபோலப் பெண்களையுஞ் சொல்லச் சொல்லிக் கேட்டிருந்தால் அவர்கள் ஒருபோதும் எங்களுக்கு மாறாகச் சொல்லமாட்டார்கள்; அவர்கள் நன்றிகெட்டவர்களல்ல; அப்படியானால் நாங்கள் குடியெழும்பவாரது" என்னலும், பிரண்டித்துரை கோபித்து "எடா, மூடா, உனக்கு வயதுக்குத் தக்க புத்திதான் வரும்; சொல்வதென்ன விடுவதென்னவென்பது உனக்குத் தெரியாது; ஆண்களின் சம்மதத்திற்கு மாறாகப் பெண்கள் எப்படி நிற்பார்கள். அவர்களைப்பற்றி உங்களிலும்பார்க்க நான் அறிவேன்; சிலர் பிரசவகாலத்திலும் சுகவீனகாலத்திலும் என்னோடு பழகிவிட்டார்கள்; அப்படித்தான் பழகினாலும் எல்லாரும் மாறாக நிற்கும்போது அவர்கள் எங்கள் பக்கமாக நிற்பது; வீண் பேச்சுப் பேசாதே உன் வாயை மூடு" என்று அதட்ட ஜின்தம்பி தலைகுனிந்துகொண்டான்.


* * *

"வேறொன்றுமல்ல, பாருங்கள், நான் எவருக்குந் தீமை செய்ததில்லை; உங்களுடன் கூடியபடியால் என்னையும் வெளியே போகும்படி கட்டளைசெய்தார்கள்; நான் எத்தனையோபேருக்கு மருந்துபோலிருந்தேன்; இடையிடையே பிரண்டித்துரையோடு கூடிக் கொண்டாடியமைதான் என்மீது குற்றமாகும்; நீயவர் சகவாசம் ஆகாதுதான்" என்று உவயின் பிள்ளை சொல்ல, உவிஸ்கிமுத்து அவனைத் தடுத்து "பிரண்டித் துரையோடு கூடாவிட்டால் நீ குற்றவாளியல்லவென்பதா உன்னெண்ணம்; அப்படியல்ல நீயுங் குற்றவாளிதான்; சோடாமரக்காயரும் நானும் பெருஞ்சிநேகர்; எந்தக் கொண்டாட்டத்திற்கும் அவரையின்றி நான் போவதில்லை; ஆனால் இப்பொழுது சோடாமரக்காயரை வைத்துக்கொண்டு என்னைத்தானே வெளியே போகும்படி சொல்லிவிட்டார்கள்; இது கூடிய கூட்டத்தால் வந்ததல்ல; தாம் தாம் செய்த வினைதாமேயனுபவிப்பார் என்றபடி நாங்கள் செய்த குற்றத்திற்காக எங்களுக்கு இ


## சட்ட நிரூபண சபை.

வடமாகாணம்

## மத்திய பிரிவு.



"சனங்களின் சிநேகன்"

# பரிஸ்டர் த. இராமநாதனையே தெரிவுசெய்யுங்கள்.

(mis. 526).

சாலவும் அம்மனச் சாட்சியை விடுத்து
மட்டிலாப் பவம்புரி மாக்தர்கா ளுணர்கிலரோ?
ஆதலால் எவரும் அற்பபா வத்தையும்
சிந்தையில் உணர்ந்தே செய்திடு கின்ருர்.
அதுபற்றி யன்றோ ஔவைப் பிராட்டியார்
நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை
என்றுகா முணர இடித்துக் கூறினர்
பாரோர் நகைக்கும் வைத்திய காரரும்
அறிவிலா தலைமரும் வெறியரு மன்றி
மறைறையோ ரெவரும் மனமொருப் பட்டே
தீவினை யாவுஞ் செய்திடு கின்ருர்
அவ்வனம் புரிந்த அருந்பவ மனைத்தும்
ஊழ்கூட் டியவென உளறுதல் மதியோ?
ஆடவர் மகளிர் அனைவருஞ் சேண்மின்
சிந்தனை அறிபகாம் செய்சபா வங்கள்
அனுபவி யாமல் அகலாட் டாவே
ஆனதால் நன்னெறி யறைகுவன் கேண்மின்
சிறப்புறு செல்வச் செருக்கால் தீவிர்
ஏழைகள் தங்கினை வருந்தா திரங்குமின்
பஞ்சமா பாதக மாகிய பலங்களைக்
கனவிலும் புரியக் கருதா திருமின்
ஆவி நீங்கினும் அவனியோ ரிழப்
பாவி யெனும்பேர் படையா தொழிமின்
இங்ஙனார் மௌலிச் சியவொரு மனை
எல்லு மெல்லியும் இடையீ டின்றி
வழுத்தி யவனடி மனனி லைகுகிரே

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

## சச்சிதாநந்த ராஜயோகிகளும் யாழ்ப்பாணமும்.

தன்னையும் தனக்காதாரமாகிய தலைவனையும் மறந்து மாடமாளிகைகளை நித்தியானந்த வீடென்றும், மோட்டார்வண்டியே கயிலாய விமானமென்றும், லாகிரி வஸ்துக்களே கங்கா தீர்த்தமென்றும் மலைப்புற்றுத்தட்டுக்கெட்டழிய விருக்குமித்தருணத்தில், தருமங்குன்றி அதர்மம் மேற்பட்ட இக்காலத்தில் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்ய நான் வருவேன் என்று ஸ்ரீமந். நாராயணமூர்த்தி திருவாய்மலர்ந்திருப்பதக் கொப்ப ஸ்ரீ யோகிகள் எங்கள் மத்தியிலிறங்கி, பாலோடு கற்கண்டுகலந்து பருகுவது போன்று உண்மை ஞானத்தைச் சங்கீதாமிர்தத்துடன் கலந்தூட்டி எம்மெல்லாரையும் பறுவத்தியானம் பண்ணுவிக்கிறதற் கியைந்ததைமாறுளதோ! ஸ்வாமிகளின் அருட்பிரசங்கத்தைக் கேட்குந்தருணத்திலாவது 'அரஹரமகாதேவா', என்று எம் அழுக்கடைந்தநாவாற் சொல்லவைக்கிறதற்கு மாத்திரம் எத்தனைக் கடமையுற்றவர்களாயினோம்.

சுவாமிகள் இவ்விருந்து ஹிமாலயபர்வதாந்தமீறுகச் சென்று எத்தனையோ ரிஷிகள், எத்தனையோ மகான்கள், எத்தனையோ வரிய பர்வதங்கள் தீர்த்தங்கள் யாவையுங்கண்டு தரிசித்துச் சிவகைங்கரியங்கள் செய்து அருட்பிரசாதம் பெற்று ராஜயோகமப்பியாசித்து, துரியாதீதமாயிருந்தவர், எம்மேல் இரங்கித் துரியாவஸ்தையிலிறங்கி, "தான் பெற்ற வின்பம் பெறுக விவ் வையகம்" என எம்மையுமீடேற்றும் வண்ணம் தம்மனுபவத்தைப் பிரசங்கமாரியாய்ப்பொழிவது மல்லாமல் எம்மதென்று நாம் மலைப்புகொண்டு அருமையாய்த் தேடி வெறுமையாய், மோட்டார்வண்டி வாணவேடிக்கைகள் முதலியவைகளிற் போட்டெரித்து ஊரையும் பஞ்சப்படுத்தி நாசமாய்ப் போகும் எம்பொருளிற் கொஞ்சமாவது சிவகைங்கரியத்திற் சேரட்டுமென்று கருணைகூர்ந்து எம்மத்தியிலெழுந்தருளிப் பொருள் சேர்ப்பதொழிந்து சில கெடுவார் நினைக்கும் கேடுபோலல்ல.

சொல்லப்பட்ட திருவாலங்காட்டு ரதவைப்புக்குரிய ஒருலக்ஷரூபாவை இந்தியாவிலுள்ள கோடி சீமான்களிலொருவரிடம் ஸ்வாமிகள் சென்று வாய்திறந்து கூறுமுன் செய்துமுடிக்க வியன்றும், எம்மத்தியில் வந்து எம்மை ஈடேற்றும் பொருட்டே, இத்தனை வருஷங்களாய் இந்தியாவில் எத்தனையோ ரூபாக்களைச் செலவுசெய்வித்து எத்தனையோ சிவகைங்கரியங்களைச் செய்வித்திருக்கிறார்கள். இப்பொழுதும் நாம் இந்தியாவுக்குச் சென்று பார்த்தாற்றெரியும்.

அன்றியும் நம் யாழ்ப்பாணத்திற் சேருமிச்சிறு தொகையை யொருவாறு பார்க்குமிடத்து நமக்குப் புண்ணியமாகத் தோன்றவில்லை யெனில் அவரின் பிரசங்கத்துக்கே கூலி கொடுப்பதுபோற் கொடுக்கிறோம். இதுபற்றி நாம் "ஆம்பொருள் நமதேயானால் அறம்பிறர்க்காவதன்றோ" என்று சொல்லித் துணிவுறவிடவில்லை.

இது இவ்வளவிலிருக்க, சில கெடுவார் வாயில் வந்தபடி பேசிக் கெடுகிறார்களோ என இரங்கி இதைவரையலானேன். ஒருவரின் நன்மையையெடுத்துப்பேசினால் அவரினுள்ளத்தினின் றூட்டும் ஈசனதனுக்கிரகம் நன்மையையேபயக்கும்; தீமையுரைப்பவர்க்குத் தீமையேபயக்கும். இது முற்காலம் நம்மகான்களிடம் மறைபொருளாயிருந்து தற்காலம் பாந்திருக்கும் மின்சார சக்தியில் (Electricity) தேர்ந்தவர்கள் தெள்ளிதில் விளங்கக்கிடக்கும் (magnetism) ஆகருஷணசக்தியின் தன்மையேயாம் இதுபற்

தியே மகான்களும் முன்னே எத்தனையோ விரகசியங்களை நமக்கு மறைபொருளாக வைத்தவர்கள். பக்குவமில்லாப் பாமரரென்று கண்டே" மறைத்துவைத்தார்கள். இதை உணராது அவர்கள் வஞ்சகம் செய்வார்களென நாம் வீண் அபவாதம் கூறிக்கெடுகிறோம்.

ஔவை மூதாட்டியும் "நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே" என்றார். ஆகவே மகாபுண்ணியாத்மாக்களை நன்மை தீமை பேசுபவர்கள் அவர்களிடமுள்ள நல்வினை தீவினைகளைப் பற்றிக் கொள்ள அவர்களிருவிலகுமற்று விர் மலிபாகிவிடுகின்றார்கள்.

"ஞானியை நிந்திப்பவனு நலனென்றே
ஞானியை வந்திப்பவனு மெய்ந்நல்வினை
யான கொடுவினை தீர்வார் லவ்வவர்
போன பொழுதே புகுந்திவ போகமே"

சில புண்ணியவான்கள் இக் கன்ன நோக்கமாகவே பிரபஞ்சப்பட்டகளாகியதம்மத நிமிலிறங்குகிறவர்களெனச் சாத்திரங்கள் எச்சரிக்கை பண்ணுகின்றன.

விளக்குமாற்றின் குலம் த்தையொத்த சிலருக்குமாத்துலதாவது:—

"பெற்றிருந் தாரையும் பேணார்கயவர்கள்
உற்றிருந் தாரையுலைவன சொல்லுவர்
சுற்றிருந்தார் வழியுற்றிருந்தாரவர்
பெற்றிருந்தாரன்றி யார்பெறு பேறே."

"பத்தினி பக்தர்கள் தத்துவஞானிகள்
சித்தங்கலங்கிடச் சிதைவுகள் செய்தவர்
அத்தமுமாவியும் ஆண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்தியமீது சதாநந்திதானே."

வே. சி. குமாரஸ்வாமி.

சுதுமலை,
22—9—24.

## இல்லற மகிமை.

இல்லற வாழ்வு நடைபெற்றுச் சிறப்படைதற்குச் சிறந்த விளக்காவது நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியாகும். அம்மனைவியைச் சிறப்பிக்கின்ற விளக்காவது நன்மக்கட்பேறுகும். அம்மக்களைச் சிறப்பிக்கின்ற விளக்காவது கல்வியாகும். அக்கல்வியைச் சிறப்பிக்கின்ற விளக்காவது அறிவாகும். அவ்வறிவைச் சிறப்பிக்கும் விளக்காவது ஒழுக்கவழியிலே நிற்றலாகும். அறிவாவது இது பாவம் இது புண்ணியம் இது அருவப்பொருள் இது உருவப்பொருள் என்பனவற்றைப் பகுத்தறிதலாம் பகுத்தறிவில்லாதவர்களும், நீரிலே நெருப்பிலே விழுந்தும் நஞ்சுண்டும் வலாற்காரமாகத் தற்கொலைசெய்தவர்களும் சக்கரவாளமலைக்குப்புறத்திலேயுள்ள விருட்டுலகத்திலே பிசாசுகளாகப் பிறப்பார்களென்று வேதஞ்சாற்றுகின்றது. ஓர்றிவுடைய மரங்களாகப் பிறந்தும் காய்கனி நிழல்களை யுதவியும் தேவபூசைக்குப் பத்திரபுட்பங்களை யுதவியும் தேவாலயந் திருமடங்களுக்குத் தூண் வளை போதிகை முதலிய வுறுப்புக்களாகியும் நன்மை செய்கின்றன. ஐயையோ? ஆறறிவுடைய மானுடராகப்பிறந்து தங்களுக்காயினும் பிறருக்காயினும் யாது நன்மை செய்கின்றார்கள்.

இங்ஙனம்,
வித்துவான் மு. ஆறுமுகம்பிள்ளை.
வட்டுநகர்,

## தொழிலாளர்க்குச் சுகாதாரம் வேண்டியதில்லையா?


இரத்தாட்சிஷு ஆவணிமீ 21உ வெளிவந்த 21-ம் இலக்க இந்துசாதனத்தில் 'பொதுசன சமூக சுகாதாரம்' என்ற கட்டுரை அடியேனுடைய மனதைக் கவர்ந்ததினிமித்தம் இக்கட்டுரையை எழுதலானேன். தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள சுருட்டுக் கைத்தொழிற் சாலைகளின் சுகாதாரத்தைக் கவனித்தால் அது மிகவும் ஈனஸ்திதியில் இருக்கிறதென்பதை எல்லாரும் அறிவர். அங்கு வேலைசெய்வோர் பெரும்பாலும் காலை 7 மணிக்குள் உணவருந்தி மாலை 7 மணிக்கு வீட்டுக்குச் செல்வோராவர். அப்படியாயின் அவர்கள் சரீரஅப்பியாசஞ் செய்து சுகத்தைப் பெறுவது எப்படி? அன்றியும் அரசினர் கட்டாயக் கல்விச் சட்டமானது சத்தமாத்திரை யன்றிச் செய்கையளவிலில்லை வரியறவிடுவதில் தொழிலாளி விவசாயி கூலியாள் என்னும்வித்தியாசமில்லை. முதலாளிமார்களோ என்றால் தம் கீழ் வேலைசெய்வோர்களுடைய முன்னேற்றத்தின்பொருட்டுத் தொழிற்சாலைகளிற் பிரசங்கம் முதலியன செய்வதாகக் காணோம். 7 வயது தொடக்கம் சுருட்டுத் தொழில் செய்யும் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கும், சுகாதாரவிதிகளைப் போதிப்பதற்கும் தொழிற்சாலைத் தலைவர்கள் சிரத்தை செலுத்துதல்வேண்டும். அரசினருடைய கட்டாயக் கல்விச் சட்டப்படி இராப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நடத்துதல்வேண்டும். கல்வி சுகாதாரம் என்னும் இவ்விரண்டும் சுருட்டுத் தொழிற் சாலைகளில் நடைபெறும் வண்ணம் அரசினர் விசேஷ கவனஞ்செலுத்துதல் வேண்டும். இவற்றிற்கு ஆகவேண்டிய வழிவகைகள் அமைப்பதற்கு ஒவ்வொரு தேசாபிமானியும் முன்வரவேண்டும்.

இங்ஙனம்,
கைத்தொழிற்சங்க காரியதரிசி.


சட்ட நிரூபண சபை.

வடமாகாணம்

மத்திய பிரிவு.



கோப்பாய்,

அப்புக்காத்து

சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்களையே

தெரிவு செய்யுங்கள்.

(mis. 525)


## "புத்ததாசன்" என்னும் அரச வைத்தியரின் சரித்திர வரலாறு.

புத்ததாசனென்றால் "கௌதம புத்தரின்" தொண்டன் எனப் பொருள்படும். இம்மேன்மைவாய்ந்த அரசனின் ஆளுகையைப் பற்றிச் சிற்றறிவுடைய யான் சில எழுதலாமென இறகேந்தினேன். சிங்களவமிசத்திலுதித்த புத்ததாசன் என்னும் பெயர்வாய்ந்த, அரசன் ஓர் காலத்தில் எமது இலங்காபுரியை ஆண்டுவந்தான். இவர் அரசனாயிருந்தது மாத்திரமன்றி வைத்தியத்திலும் மிகவும் சாமர்த்தியமுள்ளவராய் விளங்கினார். எங்குச் சென்றாலும் தம்முடன் ஔஷதப் பெட்டியை எடுத்துச் செல்வார். இப்படியாயிருந்து வரும் காலத்தில் ஒருநாள் குறித்தவேந்தன் தமது யானைமீது ஊர்வலம் வரும்போது தெருக்கரையில் ஒருநாகபாம்பானது, இரணநோயால் வருந்துவதைக்கண்டார். "மன்னுயிரைத் தன்னுயிர்போற் காப்பதே வேந்தர்க்கழகு என்ற பிரகாரம் மேற்படி அரசன் அந்த ஏழைப்பிராணிக்குக் கிட்டப்போய், "ஓ" நாகமே உனக்குற்ற இடரைநீக்க நான் ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் உனதுமேனியில் எனதுகரத்தைவைக்க அஞ்சுகின்றேனென மிகவும் மனச்சஞ்சலத்தோடு சொன்னார். காவலனார் செப்பிய இனியமொழிக்குச் செவிமடுத்த கெடுமனும் தனது சிரசை ஓர் புற்றுக்குள் மறைத்துக்கொண்டு கிடந்தது. உடனே பரோபகாரசிந்தையுள்ள மன்னனும் தனது சத்திரவைத்தியக் கருவியை எடுத்து இரணத்தை வெட்டிச் சுகப்படுத்தினார் இராசபெருமான், கைமாறுகருதாது தனக்குச் செய்த நன்றியை நாகம்பலவாறும் துதித்துத் தனது நாகரத்தினத்தை அவருக்குச் சன்மானமாக அளித்ததென்றும், அதை, அவர் ஓர் விகாரைக்குத் தானமாகக் கொடுத்தாரென்றும், பூர்வசரித்திரம் கூறுகின்றது. "நேயர்களே" புத்ததாசனின், தயாளகுணத்தைப் பார்த்தீர்களா? இச்சரிதையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடியது ஒன்றுளது. அதாவது உப்பானது தான் கரைந்து மற்றவர்களுக்கு நன்மைசெய்கின்றது. அதுபோல் பெறுதற்கரிய மானுடதேகமெடுத்த நாமெல்லோரும், பிறருக்கு உதவி செய்வதிற் சற்றும் பின்னிடலாகாது என்பதே.

இங்ஙனம்,
ஆ. மகாலிங்கம்,
மானிப்பாய்.

## இலங்கை முத்துச்சலாபம்.

இலங்கை முத்துச்சலாபம் ஏறக்குறைய 2000 வருடங்களுக்குமுன் கண்டறியப்பெற்றதென்பது இதிகாசத்தால் தெரிகின்றது. சிங்களப் பாஷையிலுள்ள மகாவம்சம் என்னும் இதிகாசத்திலேயே, முதன்முதல் முத்துக்குளிப்பைப்பற்றிய விபரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அக்காலந்தொடங்கி வளமான காலந்தோறும் முத்துக்குளிப்பு மிகவும் அனுகூலமாய் நடத்தப்பட்டு வந்தது. உலகத்தின் முத்துச்சலாப மெல்லாவற்றிலும் இது பேர்போனதாய்க் காணப்படுகின்றது.

மன்னார்க் குடாக்கடலைச் சேர்ந்தும் அதிக ஆழமற்றதுமான பகுதியிலேயே குளிப்பு நடக்கின்றது. இந்தக்கடல் வடக்கே இராமர் அணையாலும், கிழக்கே இலங்கைக் கரையாலும், மேற்கே தென்னிந்திய கரையாலும் எல்லைப் படுத்தப்பெற்றது.

ஆங்கிலேயர் இலங்கையை ஆளுகைசெய்யத் தொடங்கியபின் கிரமமாய், முத்துக் குளிப்பு நடத்தப்பட்டு வந்ததால் உலகத்தின் எல்லாப் பகுதியிலும் பேர் பரவிற்று. சென்ற 17 வருடக்காலமாய் முத்துக்குளிப்பு மன்னார்க்குடாக் கடலிலே நடைபெறவில்லை. அதனால் இதன் விசேஷத்தை அறிந்த எல்லாத் தேசத்தவரும், வருகிற வருடத்தில் நடக்கப்போகின்ற குளிப்பைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன் விசேஷ கிளர்ச்சி யுடையராயிருக்கின்றனர்.

அரசாட்சியார் இதற்காகச் செய்கின்ற ஆயத்தங்கள் பல. குளிப்பு நடக்குங் காலத்திலே ஐம்பதினாயிரஞ் சனங்கள் வரையில் வந்து கூடுவார்களென்பது மதிப்பு. அந்த ஆயத்தங்கள் இந்தச் சனங்களின் வசதிக்காகவே பலபேதப்படி நடைபெறுகின்றன. இலங்கையின் முத்துச்சலாபம் வடமேல் பகுதியை அடுத்த கரைநாட்டிலே அமையப்பெற்றது. இது இராக்ஷதகுளமென்னும்பெரியநீர்நிலைக்கு மேற்பாரிசமாயுள்ளது. இந்தப் பகுதி குடிநெருக்கமற்றதும், வரண்டதுமான பெரிய வெளியாயிருக்கின்றது. அவ்வெளியிலே இடைக்கிடைமாத்திரம் சிறுச்சிறு பச்சனவு காணப்படும். இதிலிருந்து கிழக்குப் பக்கமாய்ச் சில மைல்தூரத்துக்கு ஏகாந்தமான காடு பரந்திருக்கின்றது. பொதுப்பட இப்பகுதிகளில் மனுஷர் நடமாட்டம் மிகக் குறைவு. இப்பொழுது இந்தக் காட்டின் ஒரு பகுதியையே நம் அரசினர், அலங்கார கோலம் வாய்ந்த ஓர் நகரியாக்க எத்தனப்படுகின்றனர்.

புதியவருடத்தொடக்கத்திலே குளிப்பு ஆரம்பிக்கும். அதற்குமுன் மேற்படி இடத்திலே ஒரு சிறிய பட்டணம் அமைக்கப்படும். அது ஒரு சதுர மைல் விஸ்திரணமாயிருக்கும். அதனுள் வியாபாரிகள் தெரு, சோனக தெரு, குளிகாரர் தெரு, செட்டித்தெரு முதலிய தெருக்கள் விடுத்து வைக்கப்படும். கோடு, கச்சேரி, தபாற்கந்தோர், வைத்தியசாலை முதலிய உத்தியோக சாலைகளும், ஓர்மறியற்சாலையும் வகுத்து வைக்கப்படும். சுகாதார ஒழுங்குகள் ஏற்படுத்தப்படும். கூடுஞ் சனங்கள் குளிக்க முழுகச் சுத்த தண்ணீர் வக்குக்கள் அமைக்கப்படும்.

இந்தியா, அராபியா, பார்சியா முதலிய தேசங்களிலும், அப்பாலுள்ள வேறு நாடுகளிலிருந்தும் இரவும் பகலும் ஓயாது சனங்கள் வந்து கூடுவார்கள். இலங்கையார் தொகை மற்றெல்லாவருடங்களிலும்பார்க்கப் பன்மடங்காயிருக்கும் விசேஷமாய் வியாபார முயற்சிகள் அமிதமாய் நடைபெறும்.

உதயதாரகை.

## நம் தாய்நாடு எப்போது க்ஷேமமுறும்?

ஒரு நாடு என்ன நிலைமையிலிருந்தால் அது க்ஷேமமாகவிருக்கிறது என்று கருதப்படும்? அந்த நாட்டாருடைய வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களெல்லாம் போதுமான வரையில் கிடைத்து, அவர்கள் நிம்மதியாய் வாழ்ந்து கொண்டிருந்தால், அந்த நாடு க்ஷேமமாகவிருப்பதாய்க் கருதப்படுகிறது. வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய வஸ்துக்கள், உணவுக்குவேண்டிய தானிய வகைகளும், உடைக்குவேண்டிய பருத்தி, பட்டு, சணல் முதலியவைகளுமே.

பூமி நீர்வளம் நிலவளமுடையதாயிருந்தால் இயற்கைப்பொருள்கள் நன்றாக உற்பத்தியாகும். ஆனால் ஜனங்கள் விவசாயத்தில் கிருஷி சாஸ்திர அநுபவத்தை உபயோகிக்கிறவர்களாகவும், உழைப்பாளிகளாகவும் இருத்தல் வேண்டும். இத்துடன் பலவகைக் கைத்தொழில்கள் தெரிந்தவர்களாகவும் வர்த்தகத்தில் ஊக்கமுடையவர்களாகவுமிருந்தால் அந்நாட்டார் செல்வர்களாகவுமிருப்பார்கள். கைத்தொழில் தெரிந்திருந்தால் தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் இயற்கைப் பொருள்களைக்கொண்டு தங்களுக்குவேண்டிய பொருள்களைத் தாங்களே செய்துகொள்ளலாம். இதனால் நாட்டி லுள்ளவர்களுக்கு ஜீவனம் செய்யத் தொழில்கிடைப்பதோடு தங்கள்செல்வம் வெளிச்செல்லாமல் தங்கள் நாட்டிலேயே இருக்க நேர்கின்றது.

இனி இத்தகைய அநுகூலங்கள் நமது நாட்டிற்கு எவ்வளவு உண்டு என்று பார்ப்போம்.

இங்கிலாந்து சில ஆறுகளையுடைய தேசமெனினும் பூமி நம் நாட்டைப்போல் செழிப்புடையதல்ல. கடின பூமி. கோதுமை முதலிய இரண்டொரு தானியங்களும் சில காய்கனி வகைகளும் மட்டுமே அங்கு விளைவிக்கலாகும்; அதனால் அந்நாட்டார் உணவுக்கும் உடைக்கும் வேண்டிய அனேக பொருள்களை வெளிநாடுகளிலிருந்தே வரவழைத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறிருந்தும் அவர்கள் அத்தகைய முன்னேற்றமடைந்தும் செல்வமும் பலமும் பெற்றுமிருப்பானேன்? உலகில் சகல வளப்பங்களிலும் இணையற்றதான புண்ணிய பூமியைத் தாய் நாடாகப் பெற்ற நாம் இவ்வாறு இழிவான தரித்திர நிலைமையிலிருப்பானேன்? அதற்குத் தக்க காரணமில்லாமலில்லை. தங்கள் பூமி கடினமாயினும் அவர்கள் அதிக உழைப்பெடுத்துக்கொள்வதோடு, கிருஷிசாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், தாவர சாஸ்திரம் முதலிய வற்றைக்கற்று, பூமியைத் தக்கவிதமாய்த் திருத்தி அந்தந்தப்பயிருக்குத் தகுதியான எருவிட்டுப் பண்படுத்துகிறார்கள். அதனால் அவர்கள் பூமிகளில் பலன் வரவர அதிகரிக்கிறது. ஏராளமான கைத்தொழில்களைச் செய்து உற்பத்தியாகும் வஸ்துக்களை வெளிநாடுகளுக்கும் அனுப்பி நல்ல இலாபம் பெறுகிறார்கள். அன்னியநாட்டிலிருந்து பஞ்சு, தானியங்கள் முதலிய இயற்கைப்பொருள்களை வரவழைத்து அவற்றிலிருந்து துணி, பலவகை உணவுப்பொருள்கள் முதலியவற்றைச்செய்து அவற்றால் அதிகமாக வர்த்தகம் செய்கிறார்கள். இவ்வாறு அவர்கள் செல்வமும் செல்வத்தாற் பலமும் மற்ற சௌகரியங்களும் அடைந்தார்கள். இனி எல்லாச்சௌகரியங்களுமிருந்தும் நம்நாடு ஏன் இத்தகைய க்ஷீணதசையடைந்தது என்பதைக் கவனிப்போம்.

1-வது. நம் நாடு விவசாய நாடாகவேயிருந்தும், அதற்குள்ள இயற்கை வளத்தால் நம் நாட்டார் பயிரிடுவதில் தக்க சிரத்தை யெடுத்துக்கொள்வதில்லை. 'காலால் மடைதள்ளல்' என்றே பழமொழி யுண்டாக்கிக் கொண்டார்கள். பாட்டன் பூட்டன் காலத்தில் நிலங்களுக்கு எப்படிச் சாதாரண எருவும் தழையும் போட்டுக்கொண்டிருந்தார்களோ, அப்படியே யெப்போதும் செய்துகொண்டுவந்ததால், வரவரக் குறையும் பூமியின் சத்துக்குப் பதிலாகப் போதுமான ஊட்டமளிக்கப்படுவதில்லை. இதனால் வரவர விளைவு குறைந்துகொண்டே வந்துவிட்டது. நமது விவசாயிகள் உற்பத்தியை அதிகமாக்க என்ன செய்யவேண்டுமென்று சிந்திப்பதில்லை. விவசாயம் செய்வோர்க்குச் சாதாரணக் கல்விகூட இல்லை.

2-வது. பூர்வீகத்திலிருந்த கைத்தொழில்கள் கொஞ்சங் கொஞ்சமாய் அடியோடு குன்றிப்போயின. ஏனெனில் அன்னியநாட்டார் இங்கு ஆதிக்கம் பெறத்தொடங்கியதும், தங்கள் நாட்டுக் கைத்தொழில் விர்த்தியடையவும் வர்த்தகம் பெருகவும் கருதி, நம் நாட்டுக் கைத்தொழில்களை நசுக்கிவிட்டார்கள். நாம் அணியும் அணிகள் முதற்கொண்டு மேல்நாட்டிலிருந்து வரத்தொடங்கின. அவை எந்திரத்தில் செய்யப்பட்டவை. சற்றே கண்ணுக்குப் பகட்டாயும் விலை சரசமாயும் இருக்கவே நமது நாட்டார் அவற்றையே வாங்கத்தொடங்கிவிட்டார்கள். நம் நாட்டுக் கைத்தொழில்களில் முதன்மையானதாகிய நெசவுத்தொழில் ஒழிந்தேபோயிற்று. மற்றச்சாமான்களும் மேல்நாட்டிலிருந்து வருபவை, கண்ணைக்கவர்த்தக்க வெளித்தோற்றமுடையவையாதலால், நம்மவர் அவற்றையே வாங்கத்தொடங்கினார்கள், இதனால் நம் நாட்டுக் கைத்தொழில்கள் ஒழியவும் அத்தொழில்களால் ஜீவித்து வந்தோர் தரித்திர தசையடையவும் நேர்ந்தன.

3-வது. இதற்கிடையே கெட்ட காலத்தின் தன்மையால் நம்மவர்களுக்கு மேல்நாட்டு நாகரிகப்பித்து ஏறத்தொடங்கவே, ஏதுவாயிருந்த சில மேல்நாட்டுப் பெருமைகளே வாங்கவும் நடையுடைபாவனைகளில் மேல்நாட்டு ஆசாரத்தையே யநுசரிக்கவும் தொடங்கி விட்டார்கள். இதனால் குறைந்த வருமானமுடைய நம் நாட்டார்களுக்கு அதிகச் செலவு ஏற்பட்டது. தரித்திரம் அதிகரிக்கத்தொடங்கியது.

4-வது. நமது நாட்டில் உற்பத்தியாகும் இயற்கைப் பொருள்களையெல்லாம் அன்னியநாட்டார் கொண்டுபோய் வேறுபொருள்களாக்கி நமக்கே கொண்டுவந்து பெருத்த இலாபத்திற்கு விற்கத் தொடங்கினார்கள். இதனால் நமக்குண்டாகும் கெடுதிகள் எத்தகையவை யென்பதை நம்மவர் சற்றேனுமுணரவில்லை. மதிமயக்கங் கொண்டவர்கள்போல் தங்கள் சீர்கேடான நிலைமையையே தாங்கள் உணராதவர்களாய், அமைத்தெனத்தாரிடமோ மேல் நாட்டினர்த்தாரிடமோ அடிமைத்தொழில் செய்து ஜீவிப்பதுதான் மிக்க கௌரவமான தேவேலைத்திறபோம் என்று மதிக்கலானார்கள். கௌரவமானவையும் நமக்குச்செல்வத்தையளிப்பவையுமான விவசாயம்வர்த்தகம்கைத்தொழில் முதலியவற்றை அகௌரவமான இழிதொழில்களாக மதிக்கத் தொடங்கிவிட்டார்கள். உலகில் அநாதி காலந்தொட்டு அடிமைகளாக இருந்தவர்களெல்லாம் சுயாதீனம்பெறமுயற்சி செய்யும் இக்காலத்தில், அநாதி முதல் உன்னத நிலைமையிலிருந்த நம்மவர் சுயமதிப்பை மறந்து அடிமைத்தனத்தில் மகிழ்ச்சியடையத்தொடங்கினார்கள். இது கலியின் மகிமைபோலும். இத்தகைய காரணங்களால் நம் தெய்வத்திருநாடு, ஈசுவர பக்திக்கும், மெய்ஞ்ஞானத்திற்கும் பிறப்பிடமாகிய புண்ணியநாடு அகௌரவத்திற்கும், இகழ்ச்சிக்கும், தரித்திரத்திற்கும் உறைவிடமாகிவிட்டது. இதிலிருந்து நாம் மீளும் வழியில்லையோ? தக்க வழியில் முயற்சி செய்தால் எத்தகைய காரியமும் கைகூடும். இப்போது கடவுள்தயவால் நெடுநாட்களாகத் தூக்கமயக்கத்திலிருந்த நம்மவரில் பெரும்பாலர் விழிப்பிற்கு வந்துவிட்டார்கள். தங்கள் பூர்வீக உன்னதநிலையையும், அதிலிருந்து நழுவி வீழ்ந்திருக்கும் தற்கால இழிவான நிலைமையையும் உணர்ந்து, பழைய நிலைமையையடைய முயற்சி செய்துவருவது யாவரும் அறிந்த விஷயமே. ஆயினும் நம்மிடம் கெட்டகாலத்தால் உண்டாகியிருக்கும் குறைகளும் தீமைகளும் சிலவிருக்கின்றன. அவை நீக்கப்பட்டாலன்றி நாம் க்ஷேமமடைவது கூடாதகாரியமே எனலாம். ஒரு தேசத்தில் சில அறிவாளிகள் மட்டும் சரியானவழியில் நடந்துவர ஏனைய பெரும்பாலர் அந்த அறிவாளிகளின் புத்திமதிப்படி நடவாமலும், விஷயங்களைச் சரியாக உணராமலும், நமது முன்னேற்றத்திற்கு இடையூறாகிய தடைகள் இன்னவை யென்றுணர்ந்து ஒழிக்காமலும் இருந்தால், அந்தத்தேசம் ஒருபோதும் முன்னேற்றமடையாது. ஆகையால் நாம் கவனித்து நீக்கவேண்டியகுறைகள் எவை யெனப்பார்ப்போம். வரும்.

—"ஆனந்தபோதினி."

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜிது, கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலக்குடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைறாத்தலுக்கு ரூபா ௧௦. கால் றாத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923 ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பல்லினாஸ்(முதல்தர)தேவஔஷதங்களெனத் தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

# மகா வீரிய தங்க பஸ்பம்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் (மூலதும்) திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரிழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல சர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

## குருநாக பஸ்பம்—மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்—இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணெ.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

### ரோம சங்காரி

ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணா 8.

### சர்வபடை நிவாரணி

சாலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணா 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**சி. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.

(Q. (B) 46)

## தீபாவளி! தீபாவளி!!

தமிழ்த்தேசத்தவர்களுக்குத் தீபாவளிப்பண்டிகை வருஷத்தில் ஒரு முக்கியமானபண்டிகையாகும். அந்தச்சமயத்தில் அலங்காரமான காசிப் பட்டுப்புடவை ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள். தீபாவளிக்கு அநேக புதுமாதிரியான புடைவைகள் வைத்திருக்கிறோம்.

### கோல்டு மெடல் புடவை.

உடல் சாதா; விளிம்புக் கரைகளுக்கு உயர்ந்த சரிகைக்கரையும் முகதலையுமுள்ளது. பல கலர்கள். இந்தப் புடவைக்குத் தங்க பதக்கமும் மைசூர் கவர்மெண்டாரால் கொடுக்கப்பட்டது. 16 முழம் + 44" விலை ரூபா 38, 40, 50, 54.

### ஜரிகை கொட்டடிப் புடவை.

16 முழம் விலை ரூபா 38, 40, 45, 50, 55, 60, 80.
கேட்லாக் இனாம்.

**கே. எவ். முத்தையா & கம்பனி,**
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29)

புதிய சரக்கு. சரச விற்பனை.

## தங்கமெடல்கள் பெற்ற இந்திய ஜவுளி வியாபாரிகள்.

எங்களிடம் மதுரை, கராச்சி, பனாரஸ், பெங்களூர், சொர்காடு, கும்பகோணம், காஞ்சிபுரம், சேலம் இன்னுமநேகவூர் ஜவுளித்திணுசுகள் பட்டு ஜரிகைகலந்ததும், சாதா நூல்கலந்ததுமான சேலைகளும், 12 முழம தாவணிப் பாவாடை, ரவிக்கைகளும், கல்கத்தா நார்மடிகைகளும், வேஷ்டிகளும், புதுச்சேரி சேலை, தாவணி, அங்கிகளும், 150×200-ம் நம்பர் நூல்களில் வெள்ளை, பலகலர்களில் ஜரிகை கலந்த சேலைகளும், 12 முழம் தாவணிகளும், 6 முழம் துப்பட்டா (சால்வை) (6-7-8 10×6) முழம் மடிகளும் ஏராளமாய் இருக்கின்றன. ஒருதடவை ஆடர்கொடுத்தால் நயம தெரியவரும்.

வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலம் அனுப்பப்படும்.

டி. ரெங்கசாமி அய்யர் அன்சன்ஸ்,
ஜவுளிவியாபாரிகள்,
கீழ்வெளி வீதி, மதுரை.

கிளைகள்:—மேலகோபுர வாசல், மதுரை.
16 A. அய்யாபிள்ளை தெரு. P. T,
சென்னைபட்டிணம்.

(ஜவுளி விலை ஜாபிதா இனாமாய் அனுப்பபடும்.) (Q. 52)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.

தத் தண்டனை வந்து சேர்ந்தது" என்று கூறினன். சாராயநாதன் பெருமூச்சு விட்டு எங்களுக்கு இக்கக் கதி வருமென்று முன்புதானே சொல்லிவிட்டேன்; அந்தச் சத்தரிஷி வாக்கியம் எப்போதாயினும் பொய்த்ததுண்டா? இல்லையே; விதியை விலக்க யாரால் முடியும்" என்றான். அப்பொழுது சொல்விளம்பியப்பன் "அது மெய்தான்; இருக்கட்டும், யாழ்ப்பாணத்திலிருந்து இங்கே நாங்கள் வரும்போது தெருவழியே பேசிக்கொண்டுவந்த அந்தச் சத்தரிஷிவாக்கியச் சங்கதி வெளியே எப்படிப் புகைந்தது? நாங்கள் அந்தக் கதை பேசி ஐந்துநாட் செல்லமுந்தி அந்தப்படியே நாங்கள் பேசியனவெல்லாம் 'இந்துசாதனப்' பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது என்று எங்கள் முதலாளி எங்களுக்குப் படித்துக் காட்டினர்" எனலும், சாராயநாதன் "ஓம், ஓம், அது வெளிவந்த வகை எனக்குத் தெரியும்; நாங்கள் வரும்போது கல்வியங்காட்டுத் தவறணைக்கு இங்காலே ஒரு கட்டையன் மொட்டையன் கழுத்திலே ஏதோ மாலையிட்டவன்; ஆளைப்பார்த்தால் வேதாரணியக் குருக்கள் மாதிரி; அவன் பதுங்கிப் பதுங்கி எங்கள் பின்னே நீர்வேலி வரையில் வந்தான்; அவனும் அந்த அச்சுக்கந்தோரில் வேலைபார்ப்பவனும்; அவன் கேட்டுக்கொண்டுபோய்த் தானே எழுதினனோ; அல்லது அந்தக் கந்தோரிலிருக்கும் கெட்டையனுக்குச் சொல்ல, அவன் வெளியிட்டானோ தெரியாது; அவர்கள் மூலமாகத்தான் வெளிவந்திருக்கவேண்டும்; அவர்கள் இரண்டுபேருக்கும் எங்கள்மேற் பெரும் ஆத்திரம்; அவர்களுடைய எழுத்தினலே தான் வடமராட்சியாருக்குப் பெரும் ரோசமும் எங்கள் மீது பகையும் ஏற்பட்டன" என்றான்.

* * *

"அது கிடக்கட்டும்; நடந்ததைப்பற்றி இரங்குவதால் ஆவதொன்றுமில்லை; இனிச் செய்வதென்ன? அதைப்பற்றி யோசியுங்கள்" என்றான் பிரசிங்கம். "என்னைப்பற்றியோசிக்கவேண்டியதில்லை; நான் என்னுடைய பிற் சண்ணுப்பு பூசிக்கொண்டு வருகில் என் பேரை மாற்றி எல்லாரும் என்னை ஏற்றுக்கொள்வார்கள்" என்று சொல்விளம்பியப்பன் சொன்னன். "நான் பழையபடி தெயிலேறிக் கவிச்சுப் போவேன்" என்றான் சாராயநாதன். "அப்பா நீங்கள் உள்ளூர்ப் பிறந்தவர்கள்; உங்களுக்கென்ன குறை; இங்கே மறைந்தும் உலாவுவீர்கள்; எங்கள் கதி என்னவாக முடியப்போகுதோ தெரியவில்லை! நாங்கள் இன்று நேற்று இலங்கைக்கு வந்தவர்கல்லவே; பறங்கிக்காரன் உலாந்தாக்காரன்காலத்தில் வந்துசேர்ந்தோம்; எங்கள் சொந்தத் தேசத்திலும் எங்களுடைய இனத்தவர் சனத்தவர்களைக் குடியெழுப்பிவிட்டார்களாம். கப்பற் செலவிற்குக் கையிலே காசுமில்லை; என்ன செய்வதென்று தெரியவில்லையே தெய்வமே" என்று ஷாம்பேன்ரத்தினம் துயரப்படும்போது ஜின்தம்பி "ஏன், அண்ணே, ஹோட்டல்களிலே நாங்கள் தங்கியிருக்கலாமாமே; அப்படித் தங்கினின்றுலென்ன" என்று கேட்டான். "ஹோட்டலில் எத்தனை நாளைக்குத் தங்குவது; ஒருவன் எந்த ஊரிற் செல்வஞ் செல்வாக்குடன் இருந்தானே அவனுக்கு வறுமை வந்தால் அவன் ஒருபோதும் அந்த ஊரில் இருக்கவொண்ணாது" என்ற கருத்தமைந்த ஒரு வாக்கியம் பஞ்சதந்திரத்திலுண்டு; ஆனபடியால் இனி இங்கே இருப்பது மரியாதையல்ல" என்று ஷாம்பேன்ரத்தினம் சொல்லிக்கொண்டிருக்குபோது ஒரு பொலிஸ் வந்து கதவிற் படபடவென்று தட்டினன் உள்ளிருந்த இவர்கள் "அது யார்" என்று வினவுதலும் "நான்தான் கன்ஸ்டேபிள்; இந்த அகாலத்தில் என்ன சத்தம்; பொழுதுபட்டு எழுமணிக்கிடையில் உங்கள் கருமமெல்லாம் முடித்துவிடவேண்டுமல்லவா" எனலும், உள்ளிருந்தோர் "கதவைத் திறந்துகொண்டல்லவோ இருக்கவொண்ணாது; கதவைப் பூட்டிவிட்டு உள்ளுக்கு இருந்துகொண்டும் ஒன்றும் பேசக்கூடாதென்று சட்டம் எங்கே யிருக்கு; உனக்கு இங்கே அலுவலில்லை; அப்பாற் போ" என்றார்கள். "தொல்லை போறநீங்கள்தானே; எப்படியுந் தொலையுங்கள்" என்றுசொல்லிவிட்டுப் பொலிஸ் அப்பாற் சென்றான்.

[illegible]

கள்ளுவைத்திருந்தவனுக்கு 50 ரூபா அபராதம்:—சட்டுவனிலுள்ள நாகன் என்பவன் ஒருபோத்தல் கள்ளை எழுமலைக்குக் கொண்டுவந்து ஒரு வீட்டில் வைத்திருக்கபொழுது மதுபரிசோதகராற் பிடிக்கப்பட்டு மல்லாகம் பொலிஸ்கோட்டிற் குற்றஞ்சாட்டப்பட்டான். நீதிபதி அவனுக்கு 50 ரூபா அபராதம் விதித்தார்.

வீண்வதந்தி—தாழ்ந்த சாதியார் பிரயாணஞ்செய்வதற்காய்ப் பிரதிதியேகமான பெட்டிகளைப் புகைவண்டியிற் றொடுக்கும்படியும் சனப்பிரதிநிதிகள் விஷயத்தில் தாழ்ந்தசாதியாரைச் சம்மதங்கொடாது தடுக்கும்படியும் பிரமாணங்கள் விதித்தற்கான முயற்சிகளை ஸேர் அ. கனகசபையவர்கள் செய்கின்றார்களென ஒரு பொய்யதந்தி பிறந்துள்ளதென்றும் அவ்வதந்தி சுத்த அபத்தமென்றும் தாழ்ந்த வருணத்தாரையும் நன்னிலைப்படுத்துவதே ஸேர். அ. கனகசபையவர்களின் நோக்கமென்றும் அவர்வாயிலாக அறியலானோம்.

போலிஸ் உத்தியோகத்தர் பிடிக்கப்பட்டார்:—பொலிஸ் உப பரிசோதகராக இருந்து சில நாட்களுக்குமுன் நீக்கப்பட்ட மிஸ்டர் ஜெமால் என்னும் ஒருவர் கள்ளக் கையொப்ப மிடுதல் சதியாலோசனை செய்தல் பொய்ச்சாட்சிகூறல் முதலான குற்றச் சாட்டுக்களினால் பிடிக்கப்பட்டு விளக்கமறியலில் இருக்கின்றார்.

கடையிற் சுவாமி குருபூசை:-இக்குருபூசை நிகழும் இரத்தாட்ஷி புரட்டாசி மீ 25உ வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று நாள்வரைக்கும் கடையிற்சுவாமி கோவிலில் நடைபெறும்.

புகைரதப் போட்டர் இருவர் தண்டிக்கப்பட்டனர்:—கட்டுக்காஸ்தோட்டைப் புகைரதஸ்தானத்தில் வேலைசெய்த போட்டர் இருவர் மொறங்காடி என்னும் தோட்டத் தலைவராகிய மிஸ்டர் ஜே. வேர்க்குசன் என்பவருக்கு அனுப்பப்பட்ட விறண்டிப் பெட்டியைத் திருடினர்களெனக் குற்றஞ் சாட்டப்பட்டு ஒருவன் ஆறு மாச மறியலும் மற்றவன் ஐந்துமாச மறியலும் விதிக்கப்பெற்றார்கள்.

ஒரு முதலியாரும் மூன்று தலைமைக்காரரும் வேலையினின்று நிறுத்தப்பட்டனர்:—வெலாபொடாப்பத்து முதலியார் மிஸ்டர் விக்கிரமரத்தின என்பவர் சனப்பிரதிநிதியாக வரமுயலும் மிஸ்டர் அபயசேகரா என்பவருக்குச் சார்பாகச் சமமதம்கூறும்படி சனங்களைத் தூண்டினரென்றும், அவர் கீழுள்ள தலைமைக்காரர் மூவர் அவருடைய சட்டளைப்படி சனங்களைத் தூண்டினர்களென்றும் குற்றம் சாட்டப்பட்டு வேலையினின்றும் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். சிலபத்திலும் ஒருவர் ஷெ குற்றத்தினல் வேலையினின்று நிறுத்தப்பட்டிருக்கிறார்.

உத்தியோகம் பெறுதற்குப் பரிதானம்.

சிலாபத்திலுள்ள வில்லியம் ஜிதிசேனு என்பவன் சில நாட்களுக்கு முன் தந்திப் பரிசோதகராகிய மிஸ்றர் திலகரத்தின என்பவருக்கு, தனக்கு ஒரு ஓவசியர் வேலை கொடுக்கும்படியும் அதற்காக ஐம்பது ரூபா தருவேனென்றும் ஒரு கடிதம் எழுதினன். தந்திப் பரிசோதகர் அக் கடிதத்தைத் தபாற் கந்தோர்த் தலைவருக்கு அனுப்பினர். தபாற்கந்தோர்த்தலைவர் அக்கடிதத்தை இரகசியப் பொலீசரிடம் அனுப்பினர். இரகசியப் பொலீசருடைய கேள்விப்படி ஷெ தந்திப் பரிசோதகர் ஜிதிசேனு என்பவனைச் சென்ற 23உ தனது கந்தோரில் வந்து சந்திக்கும்படி அறிவித்தார். அச்சமயம் இரகசியப் பொலீசரும் தந்திப் பரிசோதகருடைய கந்தோருக்கு வந்து ஜிதிசேனுவின் வரவை நோக்கித் திரைமறைவிற் காத்திருந்தார். சற்றுவேளை

## ஒரு கண்டனக் கூட்டம்

சென்ற செவ்வாய்க்கிழமை 23-9-24 வெளிவந்த தேசாபிமானியில் இங்கு வந்திருக்கும் இந்தியர்களை "வடக்கத்தே பறையர்கள்" என்று சித்தித்து எழுதப்பட்டிருப்பதனுல் அந்த அபராதத்தையிட்டு யோசித்துக் கண்டிக்கும்படி வருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறுமணிவரையில் வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் மண்டபத்தில் யாழ்ப்பாணத்துள்ள இந்தியர்களால் ஒரு மகாசபை கூட்டப்படும். அச்சமயத்தில் இங்கு வசிக்கும் இந்தியர்கள் எல்லோரும் தவறாது சமுகஞ்செய்தல்வேண்டும்.

யாழ்ப்பாணம்,
25—9—24.
(Mis. 536).

இங்ஙனம்,
H. ஆநந்தக்கிருஷ்ணன்,
கூட்ட நிர்வாகி.

யிற் ஜிறிசேஞ என்பவன் உள்ளே வந்து ஒவசியர் வேலையைப்பற்றிப் பேசியபின் 50 ரூபா பொதியப்பெற்ற ஒரு என்வலப்பைத் தந்திப் பரிசோதகருடைய மேசைமேல் வைத்தான். அப்பொழுது இரகசியப் பொலீசர் வெளியே வந்து பணத்தையும் ஜிறிசேஞ என்பவனையும் கைப்பற்றி அவன்மீது கொழும்புப் பொலிஸ் கோட்டில் வழக்குத் தொடர்ந்தனர். நீதிபதி எதிரிக்கு 100ரூபா அபராதமும் 4 மாசக் கடூரவூழிய மறியலும் விதித்தார். பரிதானப் பணமாகிய 50 ரூபாவும் அரசினருக்காகத் தீர்க்கப்பட்டது.

### தோட்டத்தலைவரின் மதிமயக்கம்

அனுக்கலாவிலுள்ள யார்க் என்றேற் தலைவராகிய மிஸ்டர் பீ.எச் கிறீக்என்பவர் பத்தினிக் பாஞ்சாலையில் மேளமடிப்பதைத் தடுப்பதற்கு அங்குச் சென்று மேளம் அடிப்பதற்கு அனுமதிப்பத்திரம் இருக்கிறதா என்றுகேட்டார். கிரிபண்டா என்னும் சப்புருளை அனுமதி வேண்டியதில்லை யென்று கூறுதலும் தலைவருக்குக் கோபம் வந்து விட்டது. அவர் சப்புருளையை அடித்து, கைத்துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தினார். சப்புருளை அதிபர் மீது வழக்குத் தொடர்ந்தார். கோட்டில் வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது மிஸ்டர்கிறீக் தான் குற்றவாளியென்றும், செய்த அக்கிரமத்திற்காகத் தான் மிகவும் மனவருத்தப்படுகிறேனென்றும், ஐந்திரவு நித்திரையில்லாமையினால் அவ்விதம் அடாத்துச் செய்து விட்டேனென்றும், அந்த அடாத்துக்காக வழக்காளிக்கு இருபத்தைந்து ரூபா உபகாரம் கொடுக்கிறேனென்றும் கூறினார். நீதிபதி தோட்ட அதிபதியை எச்சரித்து அனுப்பினார்.

## இந்திய சமாசாரம்

### இந்தியகவி சிரேஷ்டர்.

இந்திய கவிசிரேஷ்டராகிய டக்டர் ரவீந்திரநாத்ரகூர் அவர்கள் சென்றசெவ்வாய்க்கிழமை காலை புகைரதமார்க்கமாக இங்குவந்துசேர்ந்தனர். அவரும் அவருடன் வந்த அவர்புத்திரரும் மருகியும் மிஸ்டர் காரென்னும் ஒருசித்திரக்காரரும் நேற்றுக்காலை "காறுருமாறு" என்னும் கப்பலில்மேனாட்டுக்குப் புறப்பட்டனர்.

### ஓர் ஆசிரியை மாணாக்கியைக் கொலைசெய்தனள்.

காஞ்சிபுரத்திலுள்ள ஆசிரியர் பாடசாலையில் கல்விபயிற்றும் கண்ணியம்மாள் என்னும் ஆசிரியை கமலக்கண்ணியம்மாள் என்னும் ஓர் மாணாக்கியைக் கொலைசெய்து அவள் அணிந்திருந்த ஆபரணங்களையும் திருடிக்கொண்டு அவளையும் புகைரதப் பாதையிலுள்ள மதகினுள்ளே எறிந்துவிட்டு மறைந்தனள்.

### சில அரிய உபதேசங்கள்.

(பம்பாயில் மகாத்மாகாந்திசெய்தபிரசங்கம்.)

"கோடிக்கணக்கான ஜனங்களின் வறுமையைப் போக்க ½ மணி நேரமாவது பிரதிதினமும் நூல் நூற்கும்படி சொன்னார். அன்னிய ஆடையை உடுப்பதைக்காட்டிலும் நிர்வாணமாயிருக்கலாமென்று அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் 13½ கஜம் துணி ஒவ்வொருவருக்கும் வேண்டியிருக்க 9½ கஜமே இந்தியாவில் இப்போது உற்பத்தியாகிறதென்றும், உயர்ந்த வகுப்பினர் நூல் நூற்க ஆரம்பித்தால் தாழ்ந்த வகுப்பினர் அவர்களைப் பின்பற்ற ஆரம்பித்துவிடுவார்களென்றும் பார்லிராஜீய சபையிற் சொன்னார். தம்மைப்பற்றிப் புகழ்ச்சியாகப் பேசுவதைக்கேட்டு தாம் அலுப்புற்று விட்டதாகவும், வாய்பேசாமற் காரியத்தில் எல்லோரும் தமக்கு உதவியாயிருந்தால் போதுமென்றும் உபந்நியாசித்தார். ஸ்ரீமான். ஜம்னாதாஸ் என்னை மகாத்மாவென்று அழைக்காததற்காக அவரை நீங்கள் அவமதித்தீர்கள். அது என்னையும் அவமதித்ததாகும். மகாத்மா என்று சொல்லிக்கொண்டு எனது பிரதானமான அஹிம்ஸா தர்மக்கொள்கையை எதற்காக அவமதிக்கவேண்டும். இனி மகாத்மாவென்று என்னைக் கூப்பிடக்கூடாதென நான் பத்திரிகையில் எழுதலாமென்றிருக்கிறேன். எனது ஸபர்மதி ஆச்சிரமத்தில் மகாத்மாவென்று என்னை எவரும் அழைக்கக்கூடாது ஆச்சிரமத்தாருக்கு அது ஒரு கட்டளையாகும். சகிப்புத்தன்மையில்லாதவர்கள் சுயராஜ்யத்துக்கு அருகரல்ல. ஒன்றைக்கண்டு சகியாமல் இருப்பதென்பது ஒரு வியாதிக்குச்சமானமாகும். நான் மகாத்மா அல்லாததால்தான் அதை இன்னும் ஒழித்துப் போட முடியவில்லை. எதிரிகளைக் கூட நாம் அன்புடன் நடத்தவேண்டும். அந்த ஆங்கிலேயரிடத்து எனக்குப் பகைமைகிடையாது. யாருடைய மனதையாவது புண்படுத்தியிருந்தால் [illegible] இல்லை. அவர்களிடத்தில் எனக்குள்ள அன்பினால் தான் அவர்களை எச்சரிக்கின்றேன். இப்போது செய்கிற காரியங்களைப்போல் இனிச்செய்யவேண்டாமென்றும், செய்தால் பின்னிட்டு கஷ்டப்படவேண்டியிருக்குமென்றும் நான் ஆங்கிலேயருக்கு எச்சரிக்கை செய்கிறேன். எனது சொந்தப்பிள்ளைகளிடத்தில் நான் கடுமையாக ஒவ்வோர் சமயத்தில் நடந்துகொண்டிருக்கிறேன். அதுபோல ஆங்கிலேயரைக் கண்டிக்கச் செய்யவும் எனது சுபாவத்தின் உக்கிரமான அம்சத்தை ஒவ்வோர் சமயத்தில் நான் காட்ட நேர்ந்திருக்கலாம் பரிபூரணமாகச் சாந்தியடைவதே என்னுடைய கருத்தென்று பண்டிதமோதிலால்நேருக்கு நான் ஏற்கனவே தெரிவித்து விட்டேன். ஏனெனில் நமது குடும்பத்தில் ஒற்றுமையே இல்லை. நமக்குக் கோபமும் துவேஷமும் கூடாது நான் எல்லோருக்குந் தாழ்ந்தவனாயிருந்து கொண்டு தேசசேவை செய்ய விரும்புகிறேன். எந்தக் கட்சியிலும் நான் சேர விரும்பவில்லை. என்னிடத்திலுள்ள சொற்ப அஹங்காரத்தையும் நீக்கிவிடும்படி தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன்' என்று முடித்தார். —க்ஷத்ரியன்.

## கடிதம்.

### தாய்க்கொளித்த சூலுமுண்டா?

ஆர்கலி யுடுத்த அவனியின் மீது
மக்கள் யாக்கை வகித்தா னொருவன்
கடமுனி யனைய கலைவலோ னாயினும்
நிதிக்கிழ வோனை நிகர்த்தவ னாயினும்
அகிலமு முழுது மாள்வோ னாயினும்
மண்பெண் பொன்னென மயங்குறு வாசையின்
நலனெலா நீத்த ஞானியே யாயினும்
மாட்சிமை வாய்ந்த மனச்சாட் சியினை
ஓம்பா தகைவிட் டொழுகுவா னாயின்
தனக்குத் தானே சத்துரு வாகி
நித்திரை தனினும் நெஞ்சந் திடுக்குற
கெட்டுயிர்ப் பெறிந்து நினைந்தல மருவன்!
அன்னா னுலகை அனுப்புதற் கெடுத்த
மேதக வெய்திய வெளிவே டங்கள்
கூத்தினர் கொண்ட கோலம தொக்கும்
நாம்செய் வினைகளை நன்னுட னறிந்து
பலனளித் திடுபவர் பசுபதி யன்றோ?
அவனுண ராமல் யாதுமோர் வினைகளை
எய்மா னுஞற்ற விசைந்திடு மாமோ?
அங்ஙன மவரை அறியா தெதையுஞ்
செய்திட மாட்டோ மென்பது தெரிந்தும்
யாரிடம் நீவிர் நன்மையைப் பெறற்காய்
உதார நிமித்தம் உலகுளோர் மெச்சப்
பகல்வேடம் பூண்டு பாசாங் கியற்றுவீர்!
இதனினும் பார்க்க இம்மையில் நாணமும்
துக்கமு மாகிய தொழில்களு முண்டோ?
நீதிலா தெழில்பெறு செருப்புக் காகக்
காலைக் குறைத்தல் கற்றோர்க் கழகோ?
இம்மையில் நாங்கள் இருக்குநாள் தனினும்
மறுமையில் உலப்பில் வைகல் வைகுவமே!
விசும்பினிற் றோற்றும் மின்னலை நிகர்த்த
சகத்தது வாழ்வைச் சாரமென் றுன்னி
மனச்சாட்சி என்னும் மறுவில்பே ரொளியைக்
கைவிட் டொழுகிக் கங்கை வேணியனார்
குஞ்சித பாத நீழலிற் குலவி
இன்பம் நுகர்வதை இழந்திட லாமா?
ஐயகோ! கணிப்பில் அருநிதி யீட்டி
அளகை யாளியென் றறைந்திட நாங்கள்
நிலமிசை வாழினும் நெடும்பக டுடைய
காலன் பாசங் கழுத்துறு போழ்தில்
ஈட்டிய செல்வம் இல்லக் கிழத்தி
குழவிகள் ஞாதியர் கூடவந் திடுவரோ?
தாரணி யனைத்துந் தனிபர சாண்ட
எதமில் மனுச்சக் கரவர்த்தி எங்கே?
ஆர்கலி யடைத்து அரக்கரைத் தடிந்த
தீதிலா வாய்மைச் சிறீராமன் எங்கே?
பிதிரார்ச் சிதத்தைப் பிரித்தறல் காத
துரியோ தனனொடு தொடர்ந்தமர் புரிந்து
பதினெட்டு நாளிற் பகைவரை நூறித்
தனியர சாண்ட தருமர்வாழ் வெங்கே?
பின்னாள் தன்னிற் பிறங்கிய அரசருள்
பேசமா ருலகிற் பெரும்பா கத்தை
வலியுட னாண்டலார் மன்னவன் எங்கே?
செர்மனி தேசஞ் சிறப்புட னோங்க
நல்லர சியற்றி நண்ணலர் யாரும்
புறங்கொடுத் திடவே பெருஞ்சமர் புரிந்து
அபஜெய மடைந்த கெய்சர்வாழ் வெங்கே?
அன்னோர் வாழ்வெலா மழிந்தொழிந் தனவே
நாங்கள் வச்சிர யாக்கைபெற் றோமா?
மனுநீதி கண்ட சோழன் மகனொரு
கன்றை நெரித்துக் கொன்ற தற்காக
தேரவன் மார்பிற் செலுத்திய சரிதையும்
வேதியன் ஒருவன் வீட்டில் இல்லாத
போதவன் கதவைப் புடைத்த தற்காக
மேயதன் கையை வெட்டிய தென்னவன்
பொற்கைப் பாண்டியன் எனப்புகல் சரிதையும்